# சமூக மையச் செயற்பாடாக விளங்கும் நுண்கலைத்துறையினரின் கற்றல், கற்பித்தல் செயற்பாடு - 2012 இல் கொம்மாதுறை, சீலாமுனைக் கிராமங்களில் நடை பெற்ற கூத்தை மையமாகக் கொண்ட ஓர் ஆய்வு.

சு.சந்திரகுமார்
நுண்கலைத்துறை, கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

## ஆய்வுச் சுருக்கம்

கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் பல வழிகளில் இடம்பெறுகின்றன. அவற்றுள் இயற்கையோடும், சமூகத்துடனும் இணைந்து கற்றுத் தேறுதல்; அதன் மூலம் பட்டறிவைப் பெறுதல்; நேரடியாகக் காட்டிக் கற்பித்தல் போன்றன பாடத்திட்டத்தின் நோக்கத்தை இலகுவாக அடைவதற்கு சிறப்பானதென இனங்காணப்பட்டது. இதனாலேயே மானிடவியலாளர்களும், சமூகவியலாளர்களும் தமது ஆய்வினை சமூகத்தினுள் இருந்து மேற்கொண்டு காத்திரமான பெறுபேறுகளைப் பெறுகின்றனர். இந்த வகையில் கிராம மக்களிடம் பிறந்து சமூகத்தை இணைக்கும் கூத்துக் கலையைப் பாடமாகக் கற்பிக்கும் போதும், கற்கும் போதும் அதில் தேர்ச்சி பெற்ற அண்ணாவிமாரைக் கொண்டு ஊருக்குள்ளே பழகிக் கற்பது முக்கியமான விடயமாகும். இதனை நுண்கலைத்துறையினர் பல வழிகளில் மேற்கொள்கின்றனர். நேரடியாகச் சூழலில் இறங்கி கற்பதனால் கிராம மக்களை இணைத்து அவர்களும் பயன் பெறும் வகையில் அச் செயற்பாடு அமையும். இச் சமூக இணைப்பை பிரக்ஞைபூர்வமாக ஏற்படுத்தும் சிறப்புத் தன்மையையே மாறிவரும் இன்றய சமூகம் வேண்டி நிற்கின்றது. இதுவே கல்விச் செயற்பாட்டின் முக்கிய வெளியீடாகும்.

நுண்கலைத்துறையில் சிறப்புக் கற்கைநெறியினைப் பின்பற்றும் மாணவர்களுக்கு "கண்டியரசன்" தென்மோடிக்கூத்து, "மழைப்பழம்"வடமோடி சிறுவர் கூத்து ஆகியவை முறையே கொம்மாதுறை, சீலாமுனைக் கிராமங்களில் சட்டம் கொடுத்தல் முதல் அரங்கேற்றம் வரையான தொடர் செயற்பாட்டுடன் 2012இல் கற்பிக்கப்பட்டது. காலனிய ஆதிக்கத்தின் அதிகார வெளிப்பாட்டினை எமது பண்பாட்டுடன் இணைந்ததாக நீக்குவதும் இந்தச் செயற்பாட்டினுள் புலப்பட்டது. மாணவர்கள் இவ்வாறு பயிற்சி பெற்று கூத்தில் அறிவையும், ஆழத்தையும், நுணுக்கங்களையும் பெற்று பரீட்சையில் சிறந்த பெறுபேற்றையும் பெற்றுக் கொண்டனர். இதற்கும் அப்பால் சுயமான சிந்திக்கக் கூடிய முழுமையான சமூகமயப்படுத்தலையும் பெற்றுள்ளனர். இதற்கு சமதையாக கூத்துப் பழகிய இடத்திலுள்ள கிராம மக்களும் மகிழ்ச்சி, அறிவூட்டல், பொழுது போக்கு, ஒன்று சேர்தல் போன்ற பல நன்மைகளைப் பெற்றுள்ளனர். மேற்படி ஆய்வுச்செயன்முறையில் உள்ளீர்க்கப்பட்ட மாணவர்களுக்கு, இத்தகைய மகிழ்ச்சிகரமான கற்றலுக்கான வாய்ப்பு ஏற்பட்டதுடன் பல சவால்களையும் எதிர்கொண்டனர். சமூகமைய செய்முறைக்கற்கை நெறியானதுமாணவர்கள் மத்தியில் சுயமான சிந்தனையையும், புதிய படைப்பாக்க ஆற்றலையும், புதிய கற்பனை நுட்பங்களையும் விருத்திபெறுவதற்கு உகந்த கருவியாக அமையும் என்பதே எனது ஆய்வின் முடிவாகும்.

**Keywords -** கூத்துக்கலை, சமூக ஒருங்கிசைவு, சுய சிந்தனை, சமூகமைய ஆற்றுகை